செ.வெ.எண்: 59 நாள்: 23.07.2021

**விழுப்புரம் மாவட்டம் காணை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

விழுப்புரம் மாவட்டம் காணை ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக கஞ்சனூர் ஊராட்சியில் பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் ரூ.1.70/- இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வீட்டினையும், மகளிர் சுய உதவிக்குழு சார்பாக மகளிர் சுய உதவிக்குழுவினரால் உற்பத்தி செய்யப்படும் டெரக்கோட்டா மற்றும் கைவினைப்பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ரூ.3.09/- இலட்சம் மதிப்பீட்டில் மரக்கன்றுகள் நடும் பணியினையும், மகளிர் திட்டம், கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பாக ரூ.3.50/- இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை தீவன வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து கஞ்சனூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ரூ.14.08/- இலட்சம் மதிப்பீட்டில் உணவு தானிய சேமிப்பு கிடங்கு அமைக்கும் பணியினை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனை தொடர்ந்து வெங்கந்தூர் ஊராட்சியில் தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.33.95/- இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள வெங்கந்தூர் சந்தை சாலையினையும், வீராமூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ரூ.21.92/- இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நாற்றாங்கால் பண்ணையினையும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

காணை ஊராட்சி ஒன்றியம் கக்கனூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ரூ.1.00/- இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மண்புழு உரம் தயாரித்தல் மையத்தினையும், ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.44.85/- இலட்சம் மதிப்பீட்டில் வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதையும், பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.1.70/- இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வீட்டினையும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து கக்கனூர் ஊராட்சிக்குட்பட்ட மங்களபுரத்தில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் ரூ.20.00/- இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் திறந்து வைத்தார்.

இதனை தொடர்ந்து காணை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் கட்டப்பட்ட வணிக வளாகத்தில் மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கடைகளை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் திறந்து வைத்தார்.

கள ஆய்வுக்குப்பின் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக பொருளாதார வல்லுநர் குழுக்களை அமைத்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பல்வேறு துறைகளின் வளர்ச்சிப் பணிகளை மேம்படுத்தி வரும் நிலையில், மாநிலத்தின் பொருளாதாரத்தினை உயர்த்த வேண்டுமெனில் அனைத்து கிராமங்களும் தன்னிறைவு பெற்று விளங்க வேண்டும். ஊரக பகுதிகளில் வசிக்கும் அனைத்து மக்களுக்கும் அனைத்து நலத்திட்ட உதவிகளும் கிடைக்கப்பெற வேண்டும். ஊரக பகுதிகளில் வசிக்கும் மாணவ, மாணவியர்களும் நன்கு கல்வி கற்று உயர்ந்தவர்களாக எதிர்காலத்தில் திகழ வேண்டும். அனைத்து ஊராட்சிகளிலும் பொதுமக்களின் அடிப்படை தேவையான வேளாண்மை, குடிநீர் வசதி, சாலை மேம்பாடு, தெரு விளக்கு, குடியிருப்புகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சித்துறைக்கு தனி கவனம் செலுத்தி பல அறிவுறைகளை வழங்கியுள்ளார்கள்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2006-2011-ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில், துணை முதலமைச்சராகவும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றவர் இன்றைய நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். ஆகவே, இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்கள், குக்கிராமங்களில் உள்ள பொதுமக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளார்.

அதன்படி, இத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள நானும், இத்துறை உயர் அதிகாரிகளும் மாவட்டந்தோறும் அனைத்து ஊராட்சிகளிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சி திட்டப்பணிகளை கள ஆய்வு மேற்கொண்டு, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கும், பயனாளிகளுக்கும் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் தமிழக அரசின் சார்பாக நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறோம்.

அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பத்திற்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை பார்வையிட்டு, பணியினை விரைந்து முடிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளோம் என மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஊரக வளர்ச்சித்துறை மற்றும் மகளிர் திட்டம் சார்பாக மகளிர் சுயஉதவிக்குழுவினர் மூலம் உற்பத்தி செய்யபட்ட பொருட்கள் அடங்கிய கண்காட்சி அரங்கினை திறந்து வைத்து மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் மற்றும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆகியோர் நேரில் பார்வையிட்டு, மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கு கடனுதவிக்கான காசோலைகளை வழங்கினார்கள்

இந்த ஆய்வின்போது ஊரக வளர்ச்சித்துறை முதன்மை செயலாளர் டாக்டர்.கே.கோபால்.இ,ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மேலாண்மை இயக்குநர் திருமதி.ம.பல்லவிதேவி பல்தேவ்.இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் திரு.பிரவின்.பி.நாயர்.இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர்.த.ஸ்ரீநாதா.இ.கா.ப., விழுப்புரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.பூ.காஞ்சனா, மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திருமதி.லலிதா, விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் து.ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர்.இரா.இலட்சுமணன் (விழுப்புரம்), திரு.நா.புகழேந்தி (விக்கிரவாண்டி), திரு.ஏ.ஜெ.மணிக்கண்ணன் (உளுந்தூர்பேட்டை), திரு.ச.சிவக்குமார் (மயிலம்) ஊரகவளர்ச்சித்துறை செயற்பொறியாளர் திரு.ராஜா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.

செ.வெ.எண்: 60 நாள்: 23.07.2021

**விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி, ஊராட்சி திட்டப்பணிகள் மற்றும் வாழ்வாதார செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி, ஊராட்சி திட்டப்பணிகள் மற்றும் வாழ்வாதார செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் இன்று (23.07.2021) ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின்கீழ் அனைத்து ஊராட்சிகளிலும் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்பதையும், நிலுவையிலுள்ள குடிநீர் இணைப்பு பணிகள் குறித்தும், பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை, நிலுவையில் உள்ள குடியிருப்பு கட்டுமானப்பணிகள் குறித்து ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியம் வாரியாக ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் அனைத்து ஊராட்சிகளிலும் கசிவு நீர் குட்டை அமைக்கும் பணிகள், பெருமளவு மரக்கன்றுகள் நடும் பணிகள், சமுதாய உறுஞ்சு குழி அமைத்தல், மீன் வளர்ப்பு குட்டை அமைத்தல், நாற்றாங்கால் பண்ணை அமைக்கும் பணிகள், கால்நடை தீவனம் வளர்த்தல், திடக்கழிவு மேலாண்மை திட்டம், மண்புழு உரம் தயாரிக்கும் பணிகள், சமுதாய உறுஞ்சுக்குழி மற்றும் சமுதாய திறந்தவெளி கிணறு அமைத்தல் உள்ளிட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

ஊரக வளர்ச்சித்துறை சார்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் அனைத்து வளர்ச்சி திட்டப்பணிகளையும் துரிதப்படுத்தி தரமான முறையில் விரைந்து முடிக்க துறை சார்ந்த அலுவலர்களுக்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை முதன்மை செயலாளர் டாக்டர்.கே.கோபால்.இ,ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மேலாண்மை இயக்குநர் திருமதி.ம.பல்லவிதேவி பல்தேவ்.இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் திரு.பிரவின்.பி.நாயர்.இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர்.த.ஸ்ரீநாதா.இ.கா.ப., விழுப்புரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.பூ.காஞ்சனா, மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திருமதி.லலிதா, விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் து.ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர்.இரா.இலட்சுமணன் (விழுப்புரம்), திரு.நா.புகழேந்தி (விக்கிரவாண்டி), திரு.ஏ.ஜெ.மணிக்கண்ணன் (உளுந்தூர்பேட்டை), திரு.ச.சிவக்குமார் (மயிலம்) ஊரகவளர்ச்சித்துறை செயற்பொறியாளர் திரு.ராஜா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.